# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **08 செப்டம்பர் 2019** | **பொதுக்காலம் 23 ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



**வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

# உங்கள் சிந்தனைக்கு...

**அன்னை மரியாளின் பிறப்புப் பெருவிழா**

நமது தாய் திருச்சபை அன்னை மரியாளின் மகத்துவத்தை ஐந்து பெருவிழாக்கள், மூன்று திருவிழாக்கள், பதினேழு நினைவு நாட்கள் மூலம் பறைசாற்றிக் குதுகலிக்கிறது. நாம் மகிழ்ந்துக் கொண்டாடும் விழாக்களில் ஒன்றுதான் அன்னை மரியாளின் பிறப்புப் பெருவிழா. “அன்னை மரியாவை நாடாமல் இறையருளைப் பெறுவதற்கான விருப்பம் என்பது சிறகுகளின்றிப் பறக்க விரும்புவதைப் போன்றது.“ என்றார் திருத் தந்தை 12ம் பத்தி நாதர். அமல உற்பவியாய், அழகின் முழுமைக் கொண்டவளாய், அலகையின் தலை மிதிக்க முன் குறிக்கப் பட்டவளாய், அகிலம் உருவாகும் முன்னரே ஆண்டவரின் திட்டத்தில் இடம் பெற்றவளாய்த் திகழ்ந்தவள் நம் அன்னை மரியாள்.

தாழ்நிலை நின்ற தன்னை, தலைமுறைகள் போற்றும் பேறுடையாளாக உயர்த்திய இறைவனின் கருணையை எண்ணி, இதயம் களி கூர்ந்து “என் ஆன்மா ஆண்டவராம் கடவுளை ஏற்றிப் போற்றுகிறது“ என்று பாடினார் நம் அன்னை. தாழ்ச்சியையும் நன்றி உணர்வையும் நமக்கு உணர்த்தும் இவ்வார்த்தைகளை , நாமும் நமது உள்ளத்தில் இருத்தி ஆவியிலும் உண்மையிலும் அதனைத் தியானிப்பவர்களாய் இத்திருப்பலியில் பங்கேற்போம். அன்னையின் பிறப்பு விழாவில் தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் பெருவிழாவைக் கொண்டாடும் நாம், அன்னையின் பரிந்துரையில் உடலிலும், உள்ளத்திலும் ஆரோக்கியமாக வாழ இறையருளைப் பெற்றுச் செல்வோம்.

## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு



29-09-2019 ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை
இடம்: ஆலயப் பல்நோக்குச் சமூகக்கூடம்




முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

தொடர்பு: திரு. ரெக்ஸ் (9822-6171)

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு



**14-09-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றிமேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் நடைபெறும் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், **இன்று நடைபெறாது** என்பதை அறியத் தருகிறோம்.



## தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை பெருவிழா

**உங்கள் கவனத்திற்கு...**




- ♥ இன்று மாலை 5 மணி முதல் உங்களுடைய திருப்பலிக் கருத்துக்கள் எழுதப்பட்டு, திருப்பலிக்கு முன்னர் வாசிக்கப்படும்.



- ♥ திருவிழாவின் போது, வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை திருத்தலத்திலிருந்து கொண்டுவந்த ஆசீர்வதிக்கப்பட்ட எண்ணை மற்றும் மெழுகுதிரிகள், மலர்க்கொத்துக்கள் விற்பனைக்கு வைக்கப்படும்.



- ♥ இன்று மதியம் 1 மணி திருப்பலி முடிந்த பின், ஆலய வளாகத்தினுள் வாகனங்கள் நிறுத்த அனுமதியில்லை.

## ஆசீர்வாதச் சந்தை

மிக மலிவான விலையில் ஆண், பெண், சிறுவர் ஆடைகள், விளையாட்டுப் பொருட்கள், புத்தகங்கள் மற்றும் மேலும் பல!



**வெறும் $1, $2, $5 மட்டுமே**




**நாள்:** 8 செப்டம்பர் 2019 (இன்று)
**நேரம்:** மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை
**இடம்:** தூய லூர்து அன்னை ஆலயம்

பொருட்களை வாங்கிச் செல்ல பிளாஸ்டிக் பைகள் கொடுக்கப்பட மாட்டாது. உங்கள் சொந்தப் பைகளைக் கொண்டு வாருங்கள். இதில் கிடைக்கும் வருமானம் நமது தூய லூர்து அன்னை ஆலயச் சீரமைப்பு நிதிக்கு வழங்கப்படும்.
வாருங்கள்! வாங்கிச் செல்லுங்கள்!

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

அன்பார்ந்தவர்களே! பல்வேறு நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் மூலமாக, நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்காக **இதுவரை** S$ 4.3 **மில்லியன்** சேர்க்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மனமுவந்து நன்கொடையளித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்! நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்குத் தேவையான முழுத் தொகையான **S$ 6.2 மில்லியனை** அடைவதற்கு தொடர்ந்து உங்கள் தாராள மனதையும், செபங்களையும் வேண்டி நிற்கின்றோம்.



## புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

ST VINCENT DE PAUL HELPS PEOPLE

கடந்த ஞாயிறு (01-09-2019) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 5701.90
பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 6570.00
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

| ஞாயிறு வாசகங்கள் | | |
|---|---|---|
|  | **முதல் வாசகம்:** | சாலமோனின் ஞானம் 9:13-19 |
| | **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 90: 3-4, 5-6, 12-13, 14, 17 |
| | **பதிலுரை:** என் தலைவரே! தலைமுறைதோறும் நீரே எங்கள் புகலிடம். | |
| | **இரண்டாம் வாசகம்:** | பிலமோன் 1:9b-10,12-17 |
| | **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! உம் ஊழியன்மீது உமது முக ஒளி வீசச்செய்யும்! உம் விதிமுறைகளை எனக்குக் கற்பித்தருளும். அல்லேலூயா. | |
| | **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 14:25-33 |

| ஆலயத் திருப்பலி நேரங்கள் | | |
|---|---|---|
|  | வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| | சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| | ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| | ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| | பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

| ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள் | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

